This book is protected by copyright act. Please do not share this download with others.

இந்தப் புத்தகம் உரிமை பதிவு செய்யப்பட்டது. இதனை மற்றவருக்கு இணையம் மூலம் அனுப்புதல் கூடாது.

www.writersujatha.com

# காகிதச் சங்கிலிகள்

1

**வி**மலா ஒரு ரூபாய்க்கு நாலணா சில்லரையாக மாற்றி வைத்துக் கொண்டு டாக்டர் ரங்காச்சாரியின் சிலையைக் கடந்தாள். கம்பிகளால் தடுக்கப்பட்ட காரிடாரில் நடந்தாள். அதன் இறுதியில் கதவு சார்த்தி காக்கிச் சட்டைக்காரன் "போங்கய்யா, போங்கம்மா?" என்று சிலரை அதட்டிக் கொண்டிருந்தான். "உள்ள உடறதில்லைன்னு சொன்னனில்லை?" விமலா நாலணாவை எடுத்துத் தயாராக நீட்ட அதை அவன் பூச்சி பிடிக்கும் பல்லிபோலக் 'கபக்' என்று கவர்ந்து கொண்டு கிராதி கேட்டைத் திறந்து அவளை மட்டும் அனுமதித்து "அடப்போங்கய்யான்னா!" என்று அதட்டலைத் தொடர்ந்தான்.

விமலா டிபன் பாக்ஸை கைமாற்றிக்கொண்டு பழக்கப்பட்டுவிட்ட பாதையில் நடந்தாள். இன்றைக்கு எட்டாவது தினம். ஸ்டாஃப் நர்ஸ், டாக்டர், வார்டு அஸிஸ்டண்ட். எல்லோரும் பழக்கமாகிவிட்டார்கள். மருந்து வாசனை, ஒக்காள வாசனை எல்லாம் பழகி விட்டது. நடக்கும்போது அவ்வப்போது கேட்கும் ஓலங்களும், முனகல்களும் பழகிவிட்டன. மூர்த்தியைப் படுக்கையில் பார்ப்பது மட்டும்தான் இன்னும் பழகவில்லை. தினசரி அது அவளுக்குப் புதிய அதிர்ச்சி. தினம் தினம் அவன் படுக்கையின் கால்மாட்டில் சொருகப்படும் பழுப்புக் காகிதங்களின் எண்ணிக்கை அதிகமாவது அவளுக்குப் பழகவில்லை. புரியவும் இல்லை. அவைகளில் எழுதப்பட்டிருக்கும் வினோத லாட்டின் வார்த்தைகள் அவளை அச்சுறுத்தின.

எட்டாம் நம்பர் வார்டுக்கு வந்த உடனே தன் கணவனின் படுக்கையைப் பார்த்தாள். தூங்குகிறான். சற்று நிம்மதியாக இருந்தது. தலை உயர்த்தப்பட்டு ஒரு பக்கம் சாய்ந்து, மார்புவரை ஆஸ்பத்திரி துணியால் போர்த்தப்பட்டு வாய் திறந்து சீராக மூச்சுவிட்டுக் கொண்டு தூங்குகிறான். நல்லவேளை, குளுக்கோஸ் பாட்டில் இல்லை. மூக்கில் ரப்பர் குழாய் இல்லை.

கட்டிலுக்கு அருகே ஸ்டூலை சன்னமாக இழுத்துப் போட்டுக்கொண்டு உட்கார்ந்தாள். மணியைப் பார்த்தாள். காலை ஷிப்ட் மாறும் நேரம். முதல் ராத்திரி நர்**ஸு**கள் புறப்பட ஆயத்தம் செய்து கொண்டிருந்தார்கள். வார்டின் ஆரம்பத்தில் அன்னம்மா மேஜை போட்டு எழுதிக் கொண்டிருந்தாள்.

விமலா சற்று நேரம் மூர்த்தியையே பார்த்துக் கொண்டிருந்தாள். எட்டு நாளில் எத்தனை மாறுதல்! பொதுவாக இளைத்திருந்தாலும் முகம் வீங்கியிருக்கிறது. வெளியே தெரிந்த கை மெலிசாக இருக்கிறது. ட்ரிப் கொடுப்பதற்காகக் குத்தப்பட்ட இடங்கள் சிவப்பு சிவப்பாக... கட்டில் காலில் கத்திட்டருடன் இணைத்த பாலித்தீன் பை சோர்வுடன் தொங்கியது. விமலாவுக்கு ஒரு கணம் பீறிட்டு அழவேண்டும் போல இருந்தது.